செ.வெ.எண் - 18 நாள்-13.04.2019

# அரியலூர் மாவட்டத்தில் 1408 வாக்குச்சாவடி தலைமை அலுவலர் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திர செயல் விளக்க பயிற்சி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நாடாளுமன்ற தேர்தல் 2019-க்கான வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM), வாக்குப்பதிவினை உறுதிசெய்யும் இயந்தரம் (VVPAT) பயன்படுத்துவது மற்றும் தேர்தல் விதிமுறைகள் குறித்த இரண்டாம் கட்ட மறு பயிற்சியினை 27.சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதிக்கு தேர்தல் பொது பார்வையாளர் **முனைவர்.கே.ஹெச்.குல்கர்னி, இஆப.,** அவர்கள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இப்பயிற்சியில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

நாடாளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதையொட்டி, 18.04.2019 அன்று தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அரியலூர் மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு மையங்களில் பணியாற்றும் தலைமை தேர்தல் அதிகாரிகள் 2854 நபர்களுக்கு 149.அரியலூர், 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM), வாக்குப்பதிவினை உறுதிசெய்யும் இயந்தரம் (VVPAT) பயன்படுத்துவது குறித்து செயல் விளக்க பயிற்சி வழங்கப்படுகிறது.

அரியலூர் மாவட்டத்திலுள்ள 149.அரியலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 297 வாக்குப்பதிவு மையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள 356 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 556 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் (1), 150.ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 297 வாக்குப்பதிவு மையங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள 348 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 348 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் (1) என மொத்தம் 712 வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களும், 696 வாக்குச்சாவடி நிலை அலுவலர்களும் (1) நியமிக்கப்பட்டு, அவர்களுக்கு இரண்டாம் கட்ட மறு பயிற்சி இன்று (13.04.2019) அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு அரியலூர் மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்கு ஜெயங்கொண்டம் பெரியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியிலும் செயல் விளக்க பயிற்சிகள் வழங்கப்பட்டது என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இப்பயிற்சியில், கோட்டாட்சியர் சத்தியநாரயணன், வட்டாட்சியர் கதிரவன், மண்டல அலுவலர்கள், வாக்குப்பதிவு மைய அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**